



# Voice of Jagadguru




advaitam paramanandam

an e-magazine on advaita

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)



## ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாஸந்நிதானம் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை



தானம் கொடுப்பது சிலாக்யமானது. ஆனால் அதை ஆத்மப்ரசாரத்துக்காக செய்யக்கூடாது. धर्मः क्षरति कीर्तनात् என்று சாஸ்திரம் கூறுகிறது. தானம் கொடுப்பதை பறைசாற்றினால் தானத்தின் புண்யத்தை இழந்து விடுகிறோம் .

அதேபோல், अतिथि देवो भव, நம் அதிதிகளை அன்புடன் வரவேற்க வேண்டும். மேலும் अभ्यागतः स्वयं विष्णुः, ஒரு பெரிய மனிதன் நம் வீட்டுக்கு அழைப்பு இல்லாமலே வந்தால், அதை நாம் பெரிய அதிர்ஷ்டமாக கருத வேண்டும். இவ்வாறு, நல்லதை செய்து விட்டு அதற்கான பெருமையை ஸ்வீகரிக்காமல், நாம் அடக்கத்துடன் இருக்க கற்றுக்கொள்ள வேண்டும். மேலும் நமக்கு யாரேனும் எப்பொழுதாவது உதவி செய்திருந்தால், அதை நாம் ஒருபொழுதும் மறக்கக்கூடாது. நமக்கு மற்றவர்கள் செய்த நன்மைகளை மறந்துவிடுவது பெரிய பாபம். कृतघ्ने नास्ति निष्कृतिः, அந்த பாவத்துக்கு பிராயச்சித்தம். கிடையாது.பகவத் கிருபைதான் நமக்கு ஐஸ்வர்யத்தை கொடுக்கிறது. அதை பகவத் சேவைக்கும் மற்றவர்களுக்கு நன்மைகள் செய்வதற்கும் உபயோகப்படுத்துவது அதி உசிதம். மாறாக கர்வத்தை வளர்த்து நம் ஆஸ்திகளை துஷ்பிரயோகம் செய்வது முட்டாள்தனம். பணக்காரனாக இருந்தாலும் ஒருவன் கர்வத்தை தவிர்த்து நல் முறையில் நடந்து கொள்ள வேண்டும்.

ஒரு பொழுதும் மற்றவர்களுக்கு கெடுதல் செய்யக்கூடாது. மற்றவர்களைப் பற்றி மதிப்புக்குறைவான பேச்சுக்களை பேசி அவர்களை மனம் நோகச் செய்யக் கூடாது. நாம் மற்றவர்களை பற்றி எப்பொழுதும் நல்லதாகவே பேசவேண்டும், ஒருபொழுதும் கெடுதலாக பேசக்கூடாது. நல்ல வாழ்க்கையை நடத்துவதில் தீவிரமாக உள்ள ஒருவன் நமக்கு பெரியோர்கள் எடுத்துக் காட்டியிருக்கும் நல்ல வழிகளை பின்பற்றி நடந்து கொள்வது மிகவும் நல்லது


# Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita


ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## நவராத்திரி சிறப்பிதழ்

### ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் - ஒரு சிறு பார்வை

### பூர்வபாகம்

அகஸ்தியர் கூறியது:



அகஸ்திய முனிவர் ஸ்ரீ மஹா விஷ்ணுவின் அவதாரமாகிய ஸ்ரீ ஹயக்ரீவரை (தனது குருவை) வேண்டுகிறார். மஹா புத்திமானும், ஸர்வசாஸ்திரங்களையும் அறிந்தவருமான ஓ ஹயக்ரீவரே! ஸ்ரீ லலிதா தேவியின் மிக ஆச்சரியமான சரிதத்தை எனக்குச் சொன்னீர்கள். முதலில் தாயான அம்பாள் ஆவிர்பவித்ததையும், பிறகு அம்பாளின் பட்டாபிஷேகத்தையும், பண்டாசுரனை வதம் செய்ததையும், விரிவாகத் நீங்கள் கூறினீர்கள். மகத்தான விபவங்களின் விஸ்தாரங்களுடன் கூடிய ஸ்ரீ அம்பாள் இருக்கும் பட்டணம் மேருவின் சிகரத்தில் உள்ளது. அதையும், ஸ்ரீ பஞ்சதசாக்ஷரீ மஹா மந்திரத்தின் மஹிமையையும், எனக்கு விஸ்தாரமாக வர்ணித்தீர்கள்.

ந்யாஸத்தை விரிவாகக் கூறிய கிரந்தத்தில், ஆறு விதமான ந்யாஸம் முதலியவைகள் தங்களால் நன்கு எனக்கு விளக்கிச் சொல்லப்பட்டன. (ந்யாஸம் என்பது ஒவ்வொரு அவயவத்திலும் தன் கையினால் அந்தந்த தெய்வத்தின் பெயரைச் சொல்லித் தொடுவது. அதாவது அந்தந்த தெய்வத்தை அந்தந்த அவயவத்தில் இருப்பதை பாவிப்பது) பூஜையைப் பற்றிக் கூறும் பகுதியில் மனத்தினால் செய்ய வேண்டிய பூஜையின் முறையும்,

ஸத் ஸம்ப்ரதாயம்
An Unit of the e magazine Voice of Jagadguru)

வெளிப்படையாகச் செய்ய வேண்டிய பூஜையின் முறையும், வெளிப்படையாகச் செய்ய வேண்டிய பூஜையின் முறையையும் வெகு விரிவாகச் செய்யும் முறையும் தங்களால் எனக்கு நன்கு உபதேசிக்கப்பட்டது.

புரச்சரணத்தைக் கூறும் பகுதியில் ஜபத்தின் லக்ஷணம் சொல்லப்பட்டது. ஹோமத்தைக் கூறும் பகுதியில் ஹோமம் செய்ய வேண்டிய முறையும், ஹோமம் செய்ய வேண்டிய வஸ்துக்களையும், அதனுடைய விதிகளைப் பற்றியும், தங்களால் சொல்லப்பட்டது. ஸ்ரீ சக்ரத்திற்கும், ஸ்ரீ பஞ்ச தசாக்ஷரீ வித்யைக்கும், ஸ்ரீ த்ரிபுரஸுந்தரிக்கும், ஆசார்யனுக்கும், சிஷ்யனான உபாஸகனுக்கும், ஒருவருக்கொருவர் உள்ள தாதாத்மியத்தை (அபேதத்தை ) பிரும்மமாக இருத்தலை ரஹஸ்யத்தைக் கூறும் பகுதியில் கூறினீர்கள். ஸ்தோத்திரங்கள் கூறும் பகுதியில் பலவித ஸ்தோத்திரங்கள் நன்கு விளக்கமாக சொல்லப்பட்டன. ஸ்ரீ அம்பாளின் எல்லாவிதமான ராஜ்ய பாரங்களையும் வஹிக்கும் தேவிக்கு மந்திரிணீ எனப்பெயர். ஸ்ரீ அம்பாளின் நான்குவிதமான ஸைன்யங்களுக்கும் ஸேனாதிபதியாக இருந்து சத்ருக்களை அடக்குபவளுக்கு தண்டினீ எனப்பெயர். இவ்விரு தேவிகளின் ஸஹஸ்ர நாமங்கள் தங்களால் எனக்கு உபதேசம் செய்யப்பட்டன. ஆனால் ஸ்ரீ லலிதா தேவியின் ஸஹஸ்ரநாமமோவெனில் எனக்கு இன்னும் உபதேசிக்கப்படவில்லை. ஏன் என்று எனக்கு தெரியவில்லை ?

கருணைக்கடலான ஓ ஹயக்ரீவரே! அதில் எனக்கு சந்தேகம் உண்டாகியிருக்கிறது. அதாவது தாங்கள் மறந்து விட்டீர்களா? அல்லது நினைவிருந்தும் சொல்ல வில்லையா? அல்லது ஸ்ரீ அம்பாளின் ஸ்ஹஸ்ரநாமத்தைக் கேட்க எனக்கு யோக்யதை இல்லையா? ஏன் தாங்கள் எனக்கு உபதேசிக்க வில்லை? அதன் காரணத்தைச் சொல்ல தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

இம்மாதிரி அகஸ்திய முனிவரால் வேண்டப்பட்ட ஹயக்ரீவர் மிகுந்த ஆனந்தங்கொண்டு தபஸ்வியான அகஸ்தியருக்கு உபதேசிக்கத் தொடங்கினார்.

ஸ்ரீ ஹயக்ரீவர் சொல்லுகிறார் :-

லோபாமுத்ரையின் கணவரான ஓ அகஸ்தியரே ! ஒருமைப்பட்ட மனதுடன் கேளும். ஸஹஸ்ரநாமத்தைச் சொல்லாததின் காரணத்தை உமக்குக் கூறுகிறேன். (அம்பாளின் நாமத்தைக் கூற ஆரம்பிக்கும்போது லோபா முத்ரையின் கணவரே! என அழைத்து, சுமங்கலிகள் ஸ்ரீ அம்பாளின் ஸ்வரூபம், உத்தமியான லோபாமுத்ரை ஸ்ரீ அம்பாளின் பரம பக்கத்தை , ஆதலால் அவளை ஸ்ரீ அம்பாளாக த்யானம் செய்துகொண்டு, அகஸ்தியரே! எனக் கூறி ஹயக்ரீவர் உபதேசிக்கத் தொடங்கினார். அதாவது நம்போன்றவர்கள் சுமங்கலிகளை ஸ்ரீஅம்பாளாக பாவிப்பதற்காகவே இம்மாதிரி கூறியதாகக் கருத்து கொள்ள வேண்டும்.)



மறைத்து வைக்கவேண்டிய சிறந்த மந்திரம் என்று நினைத்து உமக்கு நான் சொல்லவில்லை. வேறு யாது காரணமும் இல்லை. மறுபடி பக்தியினால் கேட்கிறீர், ஆதலால் உமக்கு உபதேசிக்கிறேன். ஆசார்யன் பக்தியுள்ள சிஷ்யனுக்கு ரஹஸ்யமான விஷயத்தையும், உபதேசிப்பார். நீரும் பக்தி இல்லாதவனுக்கு ஒருபொழுதும் கூறவேண்டாம். வஞ்சகனுக்கும், துஷ்டனுக்கும், நம்பிக்கையில்லா தவனுக்கும், இதைக் கூறவேண்டாம்,.

ஸ்ரீ மாதாவினிடத்தில் பக்தி உள்ளவனாயும் ஸ்ரீவித்யா ராஜத்தை (பஞ்சதசியை) உணர்ந்தவனாயும். உபாஸகனாயும், சுத்தனாயும் உள்ளவனுக்கே இந்த ஸஹஸ்ர நாமத்தை உபதேசிக்க வேண்டும். ஓ முனிவரே ! தந்திரங்களில் உடனே ஸித்தியை அளிக்கக் கூடியதாகச் சொல்லிய ஸஹஸ்ரநாமங்களுள் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமமே மிகவும் சீக்கிரத்தில் பயனை அளிக்கக்கூடியது.

எப்படி மந்திரங்களுள் "ஸ்ரீவித்யை" சிறந்ததோ, அந்த ஸ்ரீவித்யைகளின் பல வகைகளில் 'காதி" வித்யை எப்படிச் சிறந்ததோ. புரங்களுள் ஸ்ரீபுரம் எப்படிச் சிறந்ததோ, சக்திகளுள் லலிதை எப்படிச் சிறந்தவளோ, ஸ்ரீவித்யோபாஸகர்களுள் ஸ்ரீ பரமசிவன் எப்படிச் சிறந்தவரோ அப்படியே பல ஸஹஸ்ரநாமங்களுக்குள் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமமே சிறந்தது. இந்த ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்தை ஜபிப்பதால் ஸ்ரீ லலிதா தேவி எவ்வளவு திருப்தியை அடைகிறாளோ, மற்ற ஸஹஸ்ரநாமங்களை படிப்பதால் அவ்வளவு சந்தோஷமடைவதில்லை. ஆதலால் ஸ்ரீ லலிதா தேவியின் திருப்திக்காக இந்த ஸஹஸ்ரநாமத்தையே எப்பொழுதும் ஜபித்து வரவேண்டும்..

பில்வ பத்திரங்களாலோ, தாமரைப்பூக்களாலோ, துளஸீதளங்களாலோ, ஸ்ரீ சக்ரத்தில் இந்த லலிதா ஸஹஸ்ரநாமத்தினால் ஸ்ரீ லலிதாம்பிகையை எவன் அர்ச்சனை செய்கிறானோ, அவனுக்கு உடனேயே ஸிம்ஹாஸனேச்வரியான ஸ்ரீ அம்பிகை வேண்டியவற்றையெல்லாம் அளிக்கிறாள். தினந் தோறும் ஸ்ரீ சக்ரத்தில் பூஜித்து, அர்ச்சித்து, பஞ்சதசாக்ஷரியையும் ஜபித்து, ஜபத்தின் முடிவில் இந்த ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்தைக் கூறவேண்டும். ஜபம், பூஜை

முதலியவைகள் செய்யச் சக்தியற்றவன் கூட இந்த ஸஹஸ்ரநாமத்தைத் தினம் தவறாது ஜபித்து வர வேண்டும்.

எல்லா அங்கத்துடனும் கூடிய அர்ச்சனம், ஜபம், இவற்றைச் செய்வதால் எந்தப் பயன் ஏற்படுமோ, அப்பயனை ஸஹஸ்ர நாம ஜபத்தால் அடைவான். ஸ்ரீ அம்பாளின் உபாஸனத்தில் மற்ற ஸ்தோத்திரங்களையும் சொல்லலாம். அதனால் மிகுந்த நன்மைகளும் ஏற்படும். இந்த ஸஹஸ்ரநாமத் தையோவெனில் நித்ய கர்மாவைப்போல் தினந்தோறும் ஜபிக்கவேண்டும். ஸ்ரீ சக்ரத்தில் அர்ச்சிப்பது, ஸ்ரீ அம்பாளுடைய பஞ்சதசாக்ஷரியை ஜபிப்பது. இந்த ஸஹஸ்ரநாமத்தை உச்சரிப்பது என்ற இவைகளே பக்தனுக்குப் போதுமானவை. மற்றவைகளும் நல்லதெனவே அறிகின்றனர். பக்தனுக்கு இந்த ஸஹஸ்ரநாம ஜபமோவெனில் மிகவும் அவசியம்.

ஓ அகஸ்தியரே! அதன் காரணத்தைச் சொல்லுகிறேன் நீர் நன்றாக மனம் திறந்து கேளும். முன்னொரு ஸமயத்தில் ஸ்ரீ லலிதா தேவி பக்தர்களின் நன்மையைக் கோரி, வசிநீ முதலிய வாக் தேவிகளை அழைத்து இம்மாதிரி சொன்னாள். வசிநீ முதலிய வாக்தேவதைகளே! என்னுடைய வார்த்தையைக் கேளுங்கள். நீங்கள் யாவரும் என்னுடைய ப்ரஸாதத்தால் மிகவும் ப்ரகாசிக்கின்ற வாக்சக்தியை அடைந்திருக்கிறீர்கள். என்னுடைய பக்தர்களுக்கு வாக்விபூதியை அளிப்பதற்காக உங்களை கட்டளையிட்டிருக்கிறேன. நீங்கள் என்னுடைய ஸ்ரீசக்ரத்தின் ரஹஸ்யத்தை அறிந்தவர்கள். என்னுடைய நாமங்களை ஜபிப்பவர்கள். ஆகையால் என்னுடைய ஸ்தோத்திரங்களை ஜபம் செய்யும்படி உங்களை கட்டளையிடுகிறேன். எந்த ஸ்தோத்திரத்தால் பக்தர்கள் துதித்த மாத்திரத்தில் எனக்கு மிகுந்த திருப்தி ஏற்படுமோ, எது என்னுடைய ஆயிரம் நாமங்களால் அடையாளம் செய்யப்பட்டதோ அந்த ஸ்தோத்திரத்தை உடனே செய்யுங்கள்.

ஹயக்ரீவர் சொல்லுகிறார்:-

லலிதாம்பிகையினால் இம்மாதிரி உத்திர விடப்பட்ட வாக்தேவிகள் ரஹஸ்யமும், திவ்யமும், மிகச் சிறந்ததுமான துதியை ஸஹஸ்ர நாமங்களால் செய்தனர். அந்த ஸ்தோத்திரமானது "ரஹஸ்ய நாம ஸாஹஸ்ரம்" என மிக ப்ரஸித்தி பெற்றது, ஓ அகஸ்த்யரே ! பிறகு ஒருமுறை ஸதஸ்ஸில் ஸிம்ஹாஸனத்திலிருந்து கொண்டு தன்னை தரிசிப்பதற்கு யாவருக்கும் மனமுவந்து இடமளித்தாள். ஸ்ரீ அம்பாளை ஸேவிப் பதற்காக கோடி ஸரஸ்வதிகளுடன் கூடின கோடி பிரும்மாக்களும், கோடி லக்ஷ்மிகளுடன் கூடின கோடி நாராயணர்களும், கோடி பார்வதிகளுடன் கூடின கோடி ருத்ரர்களும் வந்தனர். மந்திரிணீ, தண்டிநீ இவர்களைத் தலைவர்களாகக் கொண்டவர்களும், பல விதமான ரூபங்களுள்ளவர்களுமான சக்திகள் ஸ்ரீ அம்பாளை தர்சிக்க வந்தனர். இங்கு சக்திகள் பலவித உருவங் கொண்டவர்கள் என்பதை ருத்ர யாமிளம் முதலிய க்ரந்தங்களில் கூறப்பட்டிருப்பதாவது:-

ஸத் ஸம்ப்ரதாயம்
An Unit of the e magazine Voice of Jagadguru)



அவர்கள் எவ்வளவு பேர்கள் என்பதைக் கணக்கிட முடியாது. திக்பாலர் முதலிய தேவர்களும், புண்ய புருஷர்களும், பிரும்ம ரிஷிகளுமான விச்வாமித்திரர் முதலிய மனிதர்களும். யோகிகளான ஸனகாதிகள், நாரதர் முதலிய ஸித்தர்களும் பல கோடிக் கணக்கில் வந்தனர். (இங்கு ஸரஸ்வதி, பிரும்மா முதலியவர்கள் கோடிக் கணக்கில் வந்தார்கள் என்பதால் பல கோடி பிரும்மாண்டங்களிலிருந்து வந்தனர் எனக் கருத்து. ஒவ்வொரு பிரும்மாண்டத்திற்கும் பிரும்ம, விஷ்ணு, ருத்ரர் தனித் தனியே உள்ளனர். ) அப்பொழுது அங்கு யாவருக்கும் ஸ்ரீ லலிதா தேவி தர்சனத்தை அவர்கள் மனம் குளிரக் குளிர அளித்தாள்.

அந்த தேவர்கள் தர்சனம் செய்து தங்கள் தங்கள் ஸ்தானத்தில் வரிசையாக அமர்ந்ததும், பின்பு ஸ்ரீ லலிதா தேவியின் கடைக்கண்ணினால் ஏவப்பட்ட வசினீ முதலிய வாக்தேவிகள் எழுந்து கைகூப்பிக்கொண்டு தங்களால் செய்யப்பட்ட ஆயிரம் நாமங்களால் ஸ்ரீ லலிதாதேவியை துதித்தனர். இந்த துதியைக் கேட்ட ஸ்ரீலலிதா பரமேச்வரி அனுக்ரஹம் செய்ய மனம் கொண்டாள். அந்த ஸதஸ்ஸிலிருந்த எல்லா தேவர்களும் ஆச்சர்யமடைந்தனர். பிறகு ஸ்ரீ லலிதா தேவி சபையிலுள்ள தேவகணங்களைப் பார்த்து எனது கட்டளையின் பேரில் தான் வாக்தேவிகள், திவ்யங்களும், எனக்கு பிரியத்தை உண்டுபண்ணக் கூடியவைகளுமான எனது நாமங்களை அடையாளமாக கொண்ட மிகச் சிறந்த ஸ்தோத்திரத்தைச் செய்தனர். ஆகையால் தாங்கள் எனது ப்ரீத்தியை வளர்ப்பதற்கு இந்த ஸ்தோத்திரத்தை எப்பொழுதும் படியுங்கள். என்னுடைய இந்த ஸஹஸ்ர நாமத்தை பக்தர்களிடத்தில் பரவச் செய்யுங்கள். என்னுடைய இந்த ஸஹஸ்ர நாமத்தை அடிக்கடி எந்த பக்தன் படிக்கிறானோ, அவன் எனக்கு ரொம்பவும் பிரியமானவன். அவனுக்கு எல்லா வரங்களையும் நான் அளிக்கிறேன்.

ஸ்ரீ சக்ரத்தில் அர்ச்சனம் செய்து ஸ்ரீ பஞ்ச தசாக்ஷரியையும் ஜபித்து பிறகு என்னுடைய ஸஹஸ்ரநாமத்தை, என்னுடைய திருப்தியின் பொருட்டு ஜபிக்க வேண்டும். அர்சித்தாலும், அர்சிக்காமறபோனாலும், என்னுடைய பஞ்ச தசாக்ஷரியை ஜபித்தாலும், ஜபிக்காவிட்டாலும், இந்த ஸஹஸ்ரநாமத்தை என்னுடைய திருப்திக்காக எப்பொழுதும் ஜபிக்கவேண்டும். என்னக்கு திருப்தி ஏற்பட்டால், அந்த பக்தன் ஸர்வ அபீஷ்டங்களையும் அடைவான் என்பதில்

சிறிதளவும் சந்தேகமில்லை. ஆதலால் என்னுடைய ஸஹஸ்ரநாமத்தை அன்புடன் எப்பொழுதும் ஜபியுங்கள்.


பரிவாரங்களுடன் கூடிய எல்லா தேவர்களையும், ஸ்ரீ லலிதா தேவியானவள் இம்மாதிரி கட்டளையிட்டாள். ப்ரும்மா, விஷ்ணு, பரமசிவன் இவர்களும், மந்திரிணியைப் பிரதானமாகக் கொண்ட சக்திகளும் அது முதற்கொண்டு அம்பாளுடைய ஆக்ஞையால் அம்பாளுடைய திருப்தியின் பொருட்டு எப்பொழுதும் பக்தியுடன் படிக்கிறார்கள். ஓ முனிவரே! ஆகையால் அவசியம் தேவியின் பக்தனானவன் இந்த ஸஹஸ்ர நாமத்தை ஜபிக்கவேண்டும் ஓ முனீச்வரா! இது அவசியம் என்ற காரணத்தினால் நான் தங்களுக்குச் சொன்னேன். இப்பொழுது ஸஹஸ் நாமத்தை சொல்லப்போகிறேன். ச்ரத்தையுடன் கேளும், குங்குமம் போன்ற சிகப்பான சரீரமுடையவளும், மூன்று கண்களை உடையவளும், மாணிக்கங்கள் வைத்து இழைத்த ரத்ன கிரீடத்தில் ப்ரகாசிக்கின்ற சந்திரனை சிரோ பூஷணமாக உடையவளும், புன்சிரிப்புடன் கூடியவளும், பருத்த ஸ்தனங்களை உடையவளும், வண்டுகளால் சூழப்பட்ட ரத்ன கலசத்தையும், சிவந்த தாமரையையும் இரண்டு கைகளில் வைத்திருப்பவளும், அழகு வாய்ந்தவளும், ரத்னங்கள் நிரம்பிய குடத்தின் மீது வைக்கப்பட்ட சிவந்த கால்களை உடையவளும், பராசக்தியுமான ஸ்ரீ அம்பாளை த்யானம் செய்யவும்.





தியானம் - ஸிந்தூரம்போல் சிவந்த உடலும், முக்கண்ணும், சந்திரன் பிரகாசிக்கும் மாணிக்கக் கிரீட மும், சிரித்த முகமும், பெருத்த மார்பும், மது நிறைந்த இரத்தினக் கோப்பையும் செங்குவளைப்பூவை ஏந்திய கைகளும், இரத்தின கலசத்தில் பொருந்திய செவ்விய திருவடிகளும் உடைய அழகுத் தெய்வமாகப் பரதேவ தையை தியானம் செய்ய வேண்டும்.

உதயகால சூரியனைப்போல் சிவந்த உடலும், கருணையலைகள் பாயும் கடல்போன்ற கண்களும், பாசமும் அங்குசமும் புஷ்ப பாணமும் கரும்புவில்லும் ஏந்திய கைகளும் உடையவளாய் அணிமாதி சக்திக் குழாம் சூழ விளங்கும் பவானியை 'அஹம்' எனும் தத்துவமாக (பராஹந்தை வடிவினளாக) பாவிக்கிறேன்.

## ஸ்ரீ மாதாவின் அவதாரம் (1-3):



# Voice of Jagadguru



advaitam paramanandam an e-magazine on advaita

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

பரமசிவனுடைய நெற்றிக் கண்ணிலிருந்து வந்த கோபாக்கினியால் காம தேவன் சாம்பலான பின் தேவர்கள் அவனுக்கு இரங்கி அவனுடைய சாம்பலை மனித உருவாகக் கூட்டி வைத்து மன்மதன் மீண்டும் பிழைப்பிக்க வேண்டும் என்று கருதிப் பரமசிவனை அணுகப் பரமசிவன் அச்சாம்பல் வடிவைப் பார்த்தார். அப்போது அவ்வடிவு உயிர்த்தெழுந்தது. ஆனால் பழைய மன்மதனல்லாமல் பண்டாசுரன் என்ற கொடிய அரக்க வடிவில் அது ஆயிற்று. அவ்வசுரன் மண்ணிலும் விண்ணிலும் உள்ள அனைவரின் வீரியத்தை இழக்கச் செய்தான். சோணிதபுரத்தைத் தன் தலைநகராய்க் கொண்டு அவன் தேவர்களைப் படாதபாடு படுத்திய போது, நாரதர் பராசக்தியைக் குறித்துத் தவம் செய்யும்படி தேவேந்திரனுக்கும் மற்ற தேவர்களுக்கும் உபதேசித்தார். இந்திரன் தவமிருந்து முடிவில் ஒரு யாகம் செய்தான். அந்த யாக குண்டத்தில் இருந்து ஸ்ரீலலிதா மஹா த்ரிபுரஸுந்தரீ தேவி தோன்றினாள். தேவர்கள் கூடி அவளைத் துதிசெய்துப் பண்டாசுர வதத்தை வரமாக வேண்டினர். தேவியையே தங்களையாளும் இராணியாகப் பட்டாபிஷேகம் செய்யவும் விரும்பினர். விவாகமில்லாமல் பட்டாபிஷேகம் செய்வது முறையல்லவென்று பிரம்மா சொல்ல, அந்த தேவர்களின் பிரார்த்தனை கிணங்கி, தேவி பரமசிவனுக்கு மாலையிட்டாள். அதி சுந்தரமான வடிவங்கொண்டு காமேஸ்வரன் என்ற சிறப்புப் பெயருடன் பரமசிவன் மஹா த்ரிபுரசுந்தரியை நாயகியாக ஏற்றார். பிரம்மாதி தேவர்கள் அவர்கள் திருமணத்தை நடத்தி மகிழ்ந்தனர். அவர்களுக்கு ஸாம்ராஜ்ய பட்டாபிஷேகமும் செய்வித்து அளவிலா மகிழ்வெய்தினர். அவர்களுக்கு வாசஸ்தானமாக மேருவின் உச்சியில் ஸ்ரீநகரம் என்னும் பிரம்மாண்ட நகரத்தை நிர்மாணித்தனர்.



பின்னர் தேவியானவள் தேவர்கள் வேண்டுகோளைப் பூர்த்தி செய்விக்கத் தன் பரிவார சக்திகளுடன் கிளம்பிப் பண்டாசுரனுடனும் அவன் பரிவாரங்களுடனும் போர் செய்து அந்த பண்டனை வதம் செய்து முடித்தாள்.

### கேசாதி பாதவர்ணனை (4-21)

தேவதைகளை தியானம் செய்வதில் கேசாதி பாதாந்தமும், பாதாதி கேசாந்தமும் என இரண்டு முறை உண்டு. ஆனால் புருஷ ரூபமானால் பாதாதி கேசாந்தமே ஸம்பிரதாயம், சிவசக்தி ஐக்கிய ஸ்வரூபம் இரண்டு விதமாகவும் தியானிக்கப்படும். விஷ்ணுவுக்குப் பாதாதி கேசாந்த ஸ்தோத்திரம் மட்டும் இயற்றிய பகவத்பாதர் சிவனுக்குப் பாதாதி கேசாந்தம், கேசாதி பாதாந்தம் என இரண்டு ஸ்தோத்திரங்கள் இயற்றியிருப்பதின் உட்கிடக்கை இந்த தத்துவமே சிறப்பாக நமக்கு எடுத்து காட்டுகின்றது. ஸ்ரீலலிதா மஹாத்ரிபுரஸுந்தரி உபாஸனைக்குக் கேசாதி பாதாந்தமான தியானமே விசேஷமாய்க் கூறப்படுகிறது பல நூல்களில்.


## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

மஹாத்ரிபுரஸுந்தரி எல்லையில்லாத அழகின் உருவம், சுகந்தம் வீசும் சம்பக அசோக புன்னாக புஷ்பங்களின் நறுமணத்தையெல்லாம் இயற்கையிலேயே தன்னகத்தே கொண்ட கூந்தல் கற்றை உடையவள் ; நெற்றியில் கஸ்தூரி திலகமும்; மன்மதனுடைய கிருகத்தின் தோரணம் போன்ற புருவங்களின் அழகும்; முகத்தின் அழகு வெள்ளத்தில் துள்ளி விளையாடும் மீன்களைப் போன்ற கண்களை கொண்டு நம்மை வசீகரிக்கிறாள்.

நக்ஷத்திரத்தின் பொலிவைப் பழிக்கும் மூக்குத்தியுடன் கூடிய நாசியின் ரம்மியம்; சூரிய சந்திரர்கள் தோடுகளாக விளங்கும் செவிகளின் ஒளியும்; பத்மராகக் கண்ணாடியைப் பழிக்கும் கன்னங்களின் பளிங்கு போன்ற வழவழப்பும்; பவழ வாய்ச் சிவப்பும்; சுத்த வித்யையே முளைத்தாற்போன்ற அழகிய பல் வரிசையும்; பச்சைக் கற்பூரம் மணக்கும் தாம்பூலத்தின் நறுமணமும்; ஸரஸ்வதியின் வீணா நாதத்தினுமினிய குரலினால் நம்மை அந்த லலிதா பரமேஸ்வரி அருளுகிறாள்.

சொக்கனையும் சொக்கவைக்கும் புன்புறுவல்; மங்கல சூத்திரமும் அட்டிகையும் பதக்கமும் விளங்கும் கழுத்து அழகும்; காமேசுவரனுடைய விலையற்ற பிரேமையை விலைக்கு வாங்குவது போன்ற ஸ்தனங்களின் எழில் வனப்பும்; நாபியாகிற பாத்தியிலிருந்து மெல்லிய கொடி போல் எழும் ரோம வரிசையின் கொடி அமைப்பும்; மூன்று மடிப்புக்களாலழகிய சிறு வயிறும்; சிவப்புப் பட்டாடையை அணிந்து தன் அழகை மேலும் மெருகூட்டுகிறாள் அந்த லலிதா தேவி.



சிறு கிங்கிணிகளுடன் கூடிய அரைஞாண்; காமேசுவரன் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுந்துடைகலின் வனப்பையும்; இரத்தினக் கிரீடங்கள் போன்ற முழங்கால்களின் ஜொலிப்பும்; திரண்ட கணுக்காலின் வலிவும்;

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

ஆமை முதுகு போன்ற புறங்காளின் மேடும் ; வணங்குவோர் அகத்திருளைப் போக்கும் இரத்தின தீபங்களைப்போன்ற நகங்கள் பொருந்திய திருவடித் தாமரைகளின் மகிமைகளை கூற முடியவில்லை.

அன்பினால் சிவந்த உள்ளம் போல் அழகினால் சிவந்த திரு மேனி; அழகு மிகுந்த ஆபரணங்களுக்கு அழகு செய்யும் அவயவங்கள்; அழகின் பொக்கிஷம்; இணைபிரியா நாயகனாகிய காமேசுவரனுடைய இடது தொடையில் இன்புற்றமர்ந்து கண்கொள்ளாக் காட்சியளிக்கும் திருவுருவம்

### ஸ்ரீநகர வர்ணனை (22-23)

ஸ்ரீநகரங்கள் இரண்டு; ஒன்று தேவர்களால் மேருமலையின் நடுச்சிகரத்தில் நிர்மாணம் செய்யப்பட்டது; மற்றொன்று ஸகலப் பிரம்மாண்டங்களுக்கும் அப்பால் அமிருத ஸாகரத்தின் மத்தியில் இரத்தினத்துவீபத்தில் உள்ளது.



ஸ்ரீநகரத்தின் வெளிப்பிராகாரங்கள் இருபத்தைந்து. அவை வரிசையாக, இரும்பு, எஃகு, செம்பு, வெள்ளீயம், பித்தளை, பஞ்சலோஹம், வெள்ளி, தங்கம், புஷ்பராகம், பத்மராகம்,கோமேதகம், வஜ்ரம், வைடூரியம், இந்திர நீலம், முத்து, மரகதம், பவழம், நவரத்தினம், நானாரத்தினம், இவற்றாலும் மனம் புத்தி அஹங்காரம் முதலிய தத்துவங்களாலும், சூரியன், சந்திரன், மன்மதன் இவர்களுடைய தேஜஸ்ஸாலும் அமைந்தவை. எட்டாவது பிராகாரத்தில் உள்ளது கதம்பவனம். அங்கு பரதேவதையின் மந்த்ரிணியான சியாமளாதேவி வசிப்பாள். பதினைந்தாவது பிராகாரத்தில் அஷ்டதிக் பாலகர்கள் வசிப்பர். பதினாறாவதில் ஸேனாநாயகி தண்டினீ அல்லது வாராஹியின் இருப்பிடம். இங்கும் சியாமளாதேவிக்கு ஒரு கிருகம் உண்டு. பதினேழாவதில் யோகினிகள் வசிப்பர்; பதினெட்டில் மஹாவிஷ்ணு; பத்தொன்பதில் ஈசானன்; இருபதில் தாராதேவி; இருபத்தொன்றில் நமக்கு ஆனந்தம் கொடுக்கிறது. வாருணீ; இருபத்திரண்டாவது அஹங்காரக் கோட்டையில் குருகுல்லாதேவி; இருபத்து மூன்றாவது சூரியப் பிராகாரத்தில் மார்த்தண்ட பைரவர்; இருபத்துநான்கில் சந்திரன்;

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

இருபத்தைந்தாவது சிருங்காராவரணத்தில் மன்மதன். இதற்குள் மஹாபத்மவனம்; அதன் நடுவில் சிந்தாமணிக்ருஹம். அதன் அக்னி மூலையில் சிதக்னி குண்டமும் கிழக்குத் துவாரத்தின் இருபுறமும் மந்த்ரிணீ தண்டினீ தேவிகளின் கிருகங்களும் உள்ளன.



நான்கு துவாரங்களிலும் சதுராம்னாய தேவதைகள் காவல் இருப்பர். இதனுள் நவாவரணங்களுடன் கூடின ஸ்ரீசக்ரம். ஸ்ரீசக்ரத்தின் நடுவில் பஞ்ச ப்ரம்மாஸனத்தின் மேல் மகா சிம்மாசனத்தில் ஸர்வானந்த மயம் எனும் பிந்து பீடத்தில் மஹாத்ரிபுரஸுந்தரீ எழுந்தருளியிருப்பவள். ஸ்ரீசக்ரத்தின் ஆவரணங்கள் சதுரவடிவான த்ரைலோக்ய மோஹனம், பதினாறுதள ஸர்வாசாபரி பூரகம், எட்டுதள ஸர்வஸம்க்ஷோபணம், பதினான்கு கோண ஸர்வஸௌபாக்கியம், வெளிப்பத்துக்கோண ஸர்வார்த்த-ஸாதகம், உட்பத்துக்கோண ஸர்வரக்ஷாகரம், எட்டுக்கோண ஸர்வரோகஹரம், முக்கோண ஸர்வ ஸித்திப்ரதம், பிந்துவடிவ ஸர்வாநந்தமயம் என்பன.

### பண்டாசுரவதம் (24-33/2)

பண்டாசுரவதம் செய்யத்தேவி புறப்பட்டபோது அணிமாதி சக்திகளும், ப்ராஹ்மி, மாஹேச்வரீ, கௌமாரீ, வைஷ்ணவீ, வாராஹீ, மாஹேந்த்ரீ, சாமுண்டீ, மஹாலக்ஷ்மீ முதலிய சக்திகளும் நித்யா தேவதைகளும் மற்ற ஆவரண தேவதைகளும் சூழ்ந்து தேவியுடன் போருக்கு சென்றனர். ஸம்பத்கரீ தேவி யானைப்படைக்கும், அசுவாரூடா தேவி குதிரைப்படைக்கும் தேவியின் படைக்கு தலைமை வகித்தனர். கேய சக்ரம் என்ற இரதத்தில் மந்த்ரிணீ தேவியும், கிரிசக்ரம் என்ற இரதத்தில் சேனாபதியான தண்டினீ தேவியும் தேவியின் ரதத்திற்கு முன் சென்றனர். எதிரிகள் அணுகாவண்ணம் ஜ்வாலாமாலினீ சக்தி அக்கினிப்பிழம்பால் இரக்ஷை செய்யப் பராசக்தியானவள் ஸ்ரீசக்ர இரதத்தின்மேல் காட்சியளித்தாள். நித்யா தேவிகளும் மற்றவர்களும் பண்டாசுரனுடைய படைகளை நிர்மூலமாக்கியதைக் கண்டு தேவி மகிழ்ச்சியுற்றாள்.

பண்டபுத்திரனைப் பாலாதேவியும் பண்ட சகோதரர்களாகிய விஷங்கனையும் விசுக்கிரனையும் மந்த்ரிணீ தண்டினீ தேவதைகளும் வதைத்தனர், அசுரர்கள் தேவியின் படைகளை மயக்குவதற்காக விக்கினயந்திரங்களை ஸ்தாபித்தபோது தேவியானவள் காமேசுவரருடைய கடாக்ஷத்தால் கணேசரைத் தோற்றுவித்தாள். அவர் அந்த விக்கின யந்திரங்களை உடைத்தெறிந்தார். பின்னர் பண்டாசுரன் நேரில் எதிர்த்து ஹிரண்யாக்ஷன், ஹிரணியகசிபு, இராவணன் முதலிய அசுரப் பிரகிருதிகளைத் தன் தபோபலத்தால் தோற்று விக்க அவர்களை நாசம் செய்யத் தேவியானவள் தனது கைவிரல் நக நுனிகளிலிருந்து விஷ்ணுவின் பத்து அவதாரங்களையும் தோற்றுவித்து முடிவில் பண்டாசுரனுடைய பரிவாரங்களை மஹாபாசுபதாஸ்திரத்தாலும், அவனையும் அவன் தலைநகரையும் காமேசுவராஸ்திரத்தாலும் நிர்மூலமாக அழித்து தேவர்களுக்கு க்ஷேமத்தைச் செய்தாள். பிரம்மாதி தேவர்கள் தேவியை ஸ்துதி செய்து மகிழ்வெய்தினர். பின்னர் தேவியானவள் பரமசிவனுடைய நெற்றிக்கண் நெருப்பில் எரிந்து போயிருந்த மன்மதனை உலக நன்மைக்காக மீண்டும் மிக்க கருணையுடன் உயிர்ப்பித்தாள்.



### மந்த்ர ரூபம் (34-35/2)

ஸூக்ஷ்ம ரூபம் மந்திர ரூபமாகும். பஞ்சதசாக்ஷரீ மந்திரத்தின் முதல் பகுதியாகிய 'வாக்பவ' கூடத்தை தேவியின் முகமண்டலமாகவும், நடுப்பகுதியாகிய 'காமராஜ' கூடத்தை உடலாகவும், கடைப்பகுதியாகிய 'சக்தி' கூடத்தை இடுப்புக்குக் கீழ்ப்பாகமாகவும் தியானிக்க வேண்டும்.

### குண்டலினீரூபம் (36-40)

பிரம்மம் தன்னுடைய இச்சையினால் உலகனைத்தையும் படைத்துத் தானே அதனுள் பிரவேசித்திருக்கிறது. ஜீவசைதன்யம் சரீரமாகிய பிண்டத்தில் குண்டலினீ சக்திரூபத்தில் 'ஸுஷும்னா? என்னும் நடுநாடியில் அடிநுனியில் (மூலாதாரத்தில்) சுருண்டு கிடக்கும் ஸர்ப்பம் போல் அமர்ந்திருக்கும். அந்தச் சைதன்யம் விழிப்படைந்து விளக்கமுற்று மேல் நோக்கிச் சென்று ஸுஷும்னா நாடியில் அமைந்துள்ள ஆறு ஆதார சக்கரங்களையும் மூன்று கிரந்திகளையும் பிளந்துகொண்டு ஸஹஸ்ராரத்திலுள்ள ஸச்சிதாநந்தரூபமான பரமசிவத்துடன்


## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

ஐக்கியமாகி அப்போதுண்டாகும் அமிருதத்தைப் பருகிக்கொண்டு பரம்பொருளோடு அபின்னமாய்ச் சிவானந்தத்தில் திளைத்திருக்கும். யோகத்தின் லக்ஷியம் இதுதான். ஜீவசைதன்யமாய் (குண்டலினீரூபமாய்) ஒவ்வொரு சரீரத்திலும் இருப்பவள் பராசக்தியே. பரமசிவன் ஜீவசிவனாவதும் (அவதரணம்) மறுபடி ஜீவசிவனைப் பரமசிவநிலைக்கு ஏற்றுவிப்பதும் (ஆரோஹணம்) தேவியின் திருவிளையாடலே.

### பக்த அனுக்ரஹம் (41-42/2)

இந்த ஸம்ஸாரம் வழிதெரியாத முள்வனம் போன்று அதில் துணையின்றிப் புகுந்தவர்க்கு மிகுந்த துன்பந்தருவது.



அத்துன்பத்தை நீக்கிப் பயத்தைப் போக்கிப் பேரின்ப வீட்டுக்கு அழைத்துச் சென்று அமுதூட்டுபவள் அன்னை பராசக்தியாகிய ஸ்ரீ லலிதையே. (பக்தி ப்ரியா, பக்தி கம்யா, பக்திவச்யா, பயாபஹா).

அழுங்குழந்தைக்குத் தாய் இரங்குவதுபோல் அன்புடன் தன்னை நினைப்பவர்க்கு, அவருடைய தகுதியைக் கருதாது அவள் அருள் சுரக்கும். அவளை வழிபடுவோர்க்கு 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை'.

### நிர்க்குண உபாஸனை (43-451/2)

தேவியை ஸ்திரீரூப மாய்த்தான் தியானம் செய்யவேண்டும் என்பதில்லை. ஸகுணமாய்த் தியானம் செய்கையில் புருஷரூபத்திலும் தியானம் செய்யலாம். அல்லது நிர்க்குணமாகவும் தியானம் செய்யலாம். ஆயிரம் நாமங்களில் மூன்று விதமான பிரயோகங்களும் காணப்படுகின்றன.

Our Mail ID: Info@voiceofjagadguru.com

(ஸத் ஸம்ப்ரதாய (உபாஸனா) வில் தொடரும்....)

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் ஸமர்ப்பிக்கிறோம்